132. உள்நாட்டு மற்றும் சர்வதேச சாம்பியன் பட்டங்களை இராணுவ விளயாட்டு வீர மற்றும் வீராங்கனைகள் வெற்றிக் கொண்டுள்ளதுடன் அதன் காரணமாக விளையாட்டு வீர மற்றும் வீராங்கனைகள் சர்வதேச ரீதியல் அடையாளங் காணப்பட்டுள்ளார்கள். மேலும் பல தேசிய சம்பியன்ஷிப் பட்டங்களையும் விளையாட்டு வீர வீராங்கனைகள் வெற்றி கொண்டுள்ளனர்.

இலக்குகள்

133. இலக்குகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

அ. தேசிய ரீதியல் அடையப் பெற்ற இலக்குகள்

(1) தேசிய தடகள் ஷம்பியன்ஷிப்.
(2) தேசிய வில்வித்தை ஷம்பியன்ஷிப்.
(3) தேசிய பேஷ்போல் ஷம்பியன்ஷிப்.
(4) தேசிய மகளிர் கிறிக்கட் ஷம்பியன்ஷிப்.
(5) தேசிய ஜீடோ ஷம்பியன்ஷிப்.
(6) தேசிய கபடி ஷம்பியன்ஷிப்.
(7) தேசிய பாரந் தூக்கல் ஷம்பியன்ஷிப்.
(8) தேசிய படகுப் போட்டியில் ஷம்பஷயன்ஷிப்.
(9) தேசிய சொக்கர் மென்ஸ் ஷம்பியன்ஷிப்.
(10) தேசிய நீச்சல் ஷம்பியன்ஷிப்.
(11) தேசிய கால் பந்தாட்ட ஷம்பியன்ஷிப்

ஆ. சர்வதேச ரீதியில் அடையப் பெற்ற இலக்குகள்

(1) இராணுவ விளையாட்டு வீர வீராங்கனைகளினால் ஒரு தங்க பதக்கம்,நான்கு வெள்ளி பதக்கம் மற்றும் இரண்டு வெண்கலப் பதக்கங்களை 13வது IMSSU உலக சுடும் ஷம்பியன்ஷிப் பெற்றுக் கொள்ள முடிந்தது.

(2) பொதுநலவாய வியைாட்டுப் போட்டியில் குத்துச் சண்டை மற்றும் பாரம் தூக்கும் போட்டியில் 02 வெண்கலப் பதக்கங்களை பெற்றுக் கொள்ள கூடியதாகவிருந்தது.

(3) ஆசிய இளைஞர் வலு தூக்கும் போட்டியில் ஒரு வெள்ளிப் பதக்கம்.

(4) 3வது தெற்காசிய செபாக்டாக்ரோ ஷம்பியன்ஷிப்பில் நான்கு வெண்கல பதக்கங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டது.

(5) 4வது ஆசிய வுசு ஷம்பியன் ஷிப் போட்டியில் 03 தங்கம் மற்றும் ஒரு வெண்கலப் பதக்கங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டது.

(6) பிலிப்பைன்ஸ் தடகள ஷம்பியன்ஷிப்பில் ஒரு தங்கம் மற்றும் ஒரு வெண்கலப் பதக்கம் பெற்றுக் கொள்ளப்பட்டது.

(7) கொரியாவில் இடம் பெற்ற திறந்த வெளி தடகளப் போட்டியில் ஒரு வெண்கலப் பதக்கம் பெற்றுக் கொள்ளப்பட்டது.

(8) தாய்லாந்து ஜீடோ சுற்றுப் போட்டியில் 02 வெள்ளிப் பதக்கம் மற்றும் ஒரு வெண்கலப் பதக்கம் பெற்றுக் கொள்ளப்பட்டது.

சிக்கல்கள் மற்றும் சவால்கள்

134. சர்வதேச ரீதியல் ஷம்பியன்ஷிப் போடடிகளில் பிரதிநிதித்துவமாகும் விளையாட்டு வீர வீராங்கணைகளுக்கு குறைந்தளவிலான கொடுப்பனவுகள் வழங்கப்படுவதனால் இலக்கினை அடைவதற்கு சிக்கலாகவுள்ளது. அதிகளவிலான தேசிய விளையாட்டுக்களுக்கு விமான டிக்கட்டுக்கள்,தங்குமிட வசதிகள், உணவு மற்றும் போக்குவரத்து வசதிகளுக்கான கட்டணங்கள் வழங்கப்படுவதில்லை. இதன் காரணமாக சர்வதேச ரீதியல் வெற்றிகளை அடைந்து கொள்வதற்காகவும் சர்வதேச போட்டிகளில் பங்கு கொள்ளும் வீர வீராங்கணைகளின் தரத்தினை பேணிக் கொள்வதற்காகவும் விளையாட்டுத் துறை பணிப்பக குழுமமானது மேலதிகமான நிதியங்களை ஒதுக்க வேண்டியுள்ளது.

135. மட்டுப்படுத்தப்பட்ட மற்றும் பற்றாக்குறையாகவுள்ள உட்கட்டமைப்பு வசதிகள்.

அ. அனைத்து வசதிகளையும் கொண்ட விளையாட்டு அரங்கு இல்லாமை.

ஆ. விஞ்ஞான மருத்துவ ஆய்வுகூடம் இல்லாமை.

136. நன்கு தகைமை வாய்ந்த விளையாட்டுக்களுக்கு தொடர்பான வைத்தியர் இல்லாமை.

முடிவுரை

137. தற்போது போர் நடவடிக்கைகளுக்கு பின்னரான சூழல் காணப்படுவதால் இச் சூழலினை இலங்கையின் விளையாட்டுத் துறைக்கு வீர வீராங்களைகளை சர்வதேச மட்டத்திலான வெற்றிகளை பெற்றுக் கொள்வதற்காகவும் நாட்டின் கீர்த்தியினை பெற்றுக் கொள்வதற்காகவும் உருவாக்குவதற்கு உகந்த காலமாக காணப்படுகின்றது. மேலும் 250 வீர வீராங்களைகள் தேசிய மட்டத்திலான ஷம்பியன்ஷிப்களை வெற்றி கொண்டுள்ளனர். மேலும் வீர வீராங்களைகளின் திறன்களை விருத்தி செய்வதனாலும் தொழிநுட்ப தேர்ச்சிகளை அதிகரிப்பதனாலும் மேலும் பல வெற்றிகளை குவித்துக் கொள்ள முடியும்.

தகவல் தொழிநுட்ப பணிப்பக குழுமம்

138. 01 மார்ச் 2010 தொடக்கம் தகவல் தொழிநுட்ப பணிப்பக குழுமம் உருவாக்குவதற்கு இராணுவத் தளபதியினால் அனுமதி வழங்கப்பட்டது. பிரதான பதவிநிலை பணிப்பாளர் நாயகம் மற்றும் பிரதான சமிஞ்சை அதிகாரி ஆகியோரின் இராணுவ தகவல தொழிநுட்ப விடயங்களின் வினைத்திறனான செயற்பாட்டிற்கு தகவல் தொழிநுட்ப பணிப்பக குழுமம் பொறுப்பாகும். இலங்கை இராணுவ சமிஞ்சை படையணியின் 6 வது ரெஜிமென்ட்,இலங்கைத் இராணுவ சமிஞ்சை படையணியின் 11 வது ரெஜிமென்ட, இலங்கைத் இராணுவ சமிஞ்சை படையணியின் 12 வது ரெஜிமென்ட் ஆகியவை தகவல் தொழிநுட்ப பணிப்பக குழுமத்தின் பணிகளை விரிவுபடுத்துவதற்காக மென்பொருள் அபிவிருத்தி மற்றும் பொறியியற் பிரிவாக செயற்படுகின்றது. இப்பணிப்பகத்தின் அனுமதிக்கப்பட்ட ஆளணி 15 அதிகாரிகள் மற்றும் 47 சிப்பாய்கள் ஆகும். பாதுகாப்பு படைத் தலைமையகத்திற்கு கீழான இராணுவத் தலைமையகங்கள் மற்றும் ஏனைய சுயாதீன அமைப்புக்களில் இலங்கை இராணுவத் தகவல் தொழிநுட்ப முறைமையினை விருத்தி செய்தல்,தயாரித்தல்,பாரமரித்தல் மற்றும் புதுப்பித்தல் போன்றவற்றிட்கு தகவல் தொழிநுட்ப பணிப்பக குழுமம் பொறுப்புடையதாகும் மேலும் இப் பணிப்பக குழுமத்தினால் எவ் வித நிதி விடயங்களும் மேற்கொள்ளப்படுவதில்லை.

இவ் ஆண்டிற்கான செயல்திறனாய்வு

139. தகவல் தொழிநுட்ப பணிப்பகத்தின் 2018 அம் ஆண்டிற்கான செயல் திறனாய்வு:

அ. **மென்பொருள் வேலைத்திட்டம்**. 01.01.2018 தொடக்கம் 31.12.2018 வரையான காலப்பகுதியில் மென்பொருள் வேலைத் திட்டங்கள் பின்வருமாறு.

தொ இல	வேலைத்திட்டத்தின் பெயர்	வேலைத்திட்டத்தின் உரிமையாளர்	நிலை
(அ)	(ஆ)	(இ)	(ஈ)
	அடையப் பெற்ற இலக்குகள்		
1.	மாபியா ரகவரன ரணவிரு சேவா சபை	ரணவிரு சேவா சபை	1ம் கட்டம் முடிவடைந்துள்ளது
2.	கொள்வனவுகள் வளர்ச்சி கண்காணிப்பு முறைமை	மாஸ்டர் ஜெனரல் போர் உபகரணங்கள் கிளை	1ம் கட்டம் முடிவடைந்துள்ளது
3.	தகவல் தொழிநுட்ப முறைமை ரணவிரு சேவா சபை	ரணவிரு சேவா சபை / இராணுவ விவகாரங்கள் பணிப்பக குழுமம்/ ரெஜிமென்டல்	1ம் கட்டம் முடிவடைந்துள்ளது
4.	பணிகள் முகாமைத்துவ முறைமை	பொறியியற் சேவைகள் பணிப்பக குழுமம்	1ம் கட்டம் முடிவடைந்துள்ளது
5.	மேலதிக ரெஜிமென்டல் அமைப்ர்கள் கண்காணிப்பு முறைமை	பணியாளர்கள் நிர்வாக பணிப்பக குழுமம்	1ம் கட்டம் முடிவடைந்துள்ளது
6.	அதிகாரிகள் தொழில் முகாமைத்துவ முறைமை	இலங்கை இராணுவ சுயேட்சை படை	1ம் கட்டம் முடிவடைந்துள்ளது
7.	லைட்வெய்ட் டிரக்டரி எக்சஸ் ப்ரடோகல் மற்றும் அடையாள முகாமைத்துவ தகவல் முறைமை	இராணுவம்	II ம் கட்டம் முடிவடைந்துள்ளது
8.	உணவு பங்கீட்டு முகாமைத்துவ தகவல் முறைமை	நிர்வாக நாயகம் கிளை/ விநியோகம் மற்றும் போக்குவரத்து பணிப்பக குழுமம்	II ம் கட்டம் முடிவடைந்துள்ளது

(அ)	(ஆ)	(இ)	(ஈ)
9.	இ- கொள்வனவுகள் முகாமைத்துவ தகவல் முறைமை	இராணுவம்	III ம் கட்டம் முடிவடைந்துள்ளது
10.	வைத்தியசாலை தகவல முகாமைத்துவ முறைமை	இராணுவம்	V ம் கட்டம் முடிவடைந்துள்ளது
11.	நலன்புரி நிலையங்களுக்கான ஒன்லைன் கொள்வனவுகள் முறைமை	நலன்புரிகள் பணிப்பக குழுமம்	பரீட்சிக்கப்படுகின்றது
12.	தன்னியக்க ஆயுத பேரேட்டு முறைமை	ஆயுதங்கள் மற்றும் வெடி பொருட்கள் மத்திய பிரிவு	பரீட்சிக்கப்படுகின்றது
13.	சொத்துகள் முகாமைத்துவ முறைமை	சொத்துகள் முகாமைத்துவ பணிப்பக குழுமம்	பரீட்சிக்கப்படுகின்றது
14.	சிற்றூண்டிகள் மற்றும் நலன்புரி வியாபார நிலையங்களுக்கு தன்னியக்க கணக்கியல் முறைமை	பிரிவுகள்	பரீட்சிக்கப்படுகின்றது
15.	அதிகாரிகளுக்கான உணவக தன்னியக்க வேண்டுகோள் மற்றும் விலைப்பட்டியல முறைமை	இராணுவம்	பரீட்சிக்கப்படுகின்றது
16.	உணவு பங்கீடு முகாமைத்துவ தகவல் முறைமை	இராணுவம்	பரீட்சிக்கப்படுகின்றது
17.	அதிகாரிகள், சிப்பாய்கள் விடுமுறைசெயற்பாடுகளுக்கான தன்னியக்க முறைமை	இராணுவம்	பரீட்சிக்கப்படுகின்றது
18.	தரைப்படை அடையாள அட்டை முகாமைத்து தகவல் முறைமை	இராணுவம்	III ம் கட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது
19.	கொள்வனவுகள் முகாமைத்துவ தகவல் முறைமை	இராணுவ தடுப்பு மருந்து மற்றும் மனநிலை சுகாதார சேவைகள் பணிப்பக குழுமம்	நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது
20.	அடையாள முகாமைத்துவ தகவல் முறைமை மற்றும் உசயற்பாட்டு கட்டுப்படுத்தல்	இராணுவம்	நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது
21.	சம்பள முகாமைத்துவ முறைமை ஆவணங்கள் செயல்மறை.	சம்பளங்கள் மற்றும் ஆவணங்கள் பணிப்பக குழுமம்	நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது
23.	உள்ளீடு முகாமைத்துவ முறைமை	பொறியியற் சேவைகள் பணிப்பக குழுமம்	நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது
24.	பணி முகாமைத்துவ முறைமை	தகவல் தொழிநுட்ப பணிப்பக குழமம் மற்றும் மென்பொருள் பொறியியற் மற்றும் அபிவிருத்தி பிரிவு.	நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது
25.	இராணுவ கருணை நிதியம் ப்ரோடோ வகை வடிவமைப்பு முறைமை	இராணுவ கருணை நிதிய பணிப்பக குழுமம்	நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது
26.	தன்னியக்க விலைப் பட்டியல் முறைமை	நிதியியல் பணிப்பக குழுமம்/ நிதி முகாமைத்துவ கிளை / வரவு செலவு திட்ட மற்றும் நிதி முகாமைத்துவ பணிப்பக குழுமம்/ கணக்கியல் அலுவலகம்	நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது
27.	வாகனங்கள் ட்ரெகிங் முறைமை	இராணுவம்	பரீட்சிக்கப்படுகின்றது
28.	ஸ்மார்ட் சென்ட்ரி	இராணுவம்	பரீட்சிக்கப்படுகின்றது
29.	வானொலி அலைவரிசை இனங்காட்டி தீர்வு	பாதுகாப்பு கருத்தரங்கு	முடிவடைந்துள்ளது

அட்டவணை 3.32. இவ் ஆண்டிற்கான செயல்திறன் மீளாய்வு.

ஆ. இணைய வலையமைப்பு முன்னேற்றம் செயற்பாடுகளின் விபரங்கள் பின்வருமாறு:

தொ இல	இணைய வலைத்தளம்- இடம்	நிலை
(அ)	(ஆ)	(இ)
1.	இராணுவ உடற்பயிற்சி பாடசாலை	நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது
2.	லாயா ஹோட்டல்	நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது
3.	இராணுவ வைத்தியசாலை வலைத்தளம்	நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது

அட்டவணை 3.33. வலைத்தளங்களின் அபிவிருத்தி செயற்பாடுகள்

<u>இலங்கைத் இராணுவ பாதுகாப்பின் விருத்திக்காக சைபர் பாதுகாப்பு அளவீடுகள்</u>

140. இவ் ஆண்டிற்காக இலங்கைத் இராணுவப் பாதுகாப்பின் விருத்திக்காக சைபர் பாதுகாப்பு அளவீடுகள பின்வருமாறு:

அ. இலங்கைத் இராணுவத்தின் வலைப்பின்னல் மற்றும் முறைமைக்கு எதிரான எதிர்கால சைபர் அச்சுறுத்தல்கள் குறைக்கப்பட்டுள்ளதுடன் 07-02-2018ற்கு பிறகு இப் பணிப்பக குழுமத்தினால் எடுக்கப்பட்ட பின்வரும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது.

(1) இராணுவ ஈ.மெயில் முறைமை தவிர்ந்த இராணுவ முறைமையினூடாக் செயற்படும் இணையங்களும் தடுத்து நிறுத்தப்பட்டன.

(2) அனைத்து இராணுவம் முறைமை நடாத்தப்பட்டது.

(3) அனைத்து அடையாளங் காணப்பட்ட முறைமைகளும் இணைக்கப்பட்டது.

ஆ. மேலதிகமான ஆரம்பிப்பதற்கு திறந்த வெளி வலையமைப்பு அனுமதிப்பத்தரங்கள் புதிதாக பின்வருமாறு:

வகைப்படுத்தப்பட்ட தரைப்படை முறைமைகள் பின்வருமாறு:

(1) இராணுவ தரவு வலையமைப்பு ஊடாக அணுகல்(இணையம்)

(2) இராணுவ தரவு வலையமைப்பு மற்றும இணையத்தின் ஊடாக அணுகல்.

(3) இணையம் மற்றும் விருசுவல் தனியார் மென்பொருள் வலையமைப்பு ஊடாக அணுகல்.

இ. இணையத்தின் ஊடாக அணுகுவதற்காக புதிய விருசுவல் தனியார் வலையமைப்பு தொழிநுட்பம் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டது.

உ. முறைமையின் கடவுச்சொல் பாதுகாப்பினை விரிவாக்கத்திற்காக இராணுவ சைபர் பாதுகாப்பு கொள்கைகளுக்கமைய முறைமை தரவு கடவுச்சொல் முறைமை அமுலாக்கப்பட்டது.

ஊ. இன்போ.இராணுவம்.எல்கே போன்ற விஷேட முறைமைகள் இராணுவ தரவு வலையமைப்பில் மட்டுப்படுத்தப்பட்டதுடன் இராணுவத்தின் முக்கிய நபர்களுக்கான உள்ளக ப்ரடோகல் விரிசுவல் தனியார் வலையமைப்பு அறிமுகப்படுத்தப்பட்டது..

எ. முறைமை தரவு தளத்தில் ஆய்வு நடாத்தப்பட்டதுடன் முறைமையிலுள்ள தேவையற்ற பயன்பாட்டாளர்கள் நீக்கப்பட்டனர்.

ஏ. முறைமையிலுள்ள பைல்கள் மீளச் சேமிக்கப்பட்டது மற்றும் தரவுத் தள ஒருமுகப்படுத்தப்பட்டது.

ஐ. இராணுவ சைபர் பாதுகாப்பு கொள்கைக்கமைய சேர்வர் தணிக்கை கடினமாக்கப்பட்டது.

ஒ. சமூக வலைத்தளம் தொடரபான விழிப்புணர்ச்சி விரிவுரைகள் மற்றும் செயலமர்வுகள் நடாத்தப்பட்டது.

சிக்கல்கள் மற்றும் சவால்கள்

141. தகவல் தொழிநுட்ப பணிப்பக குழுமத்துடன் தொடர்புடைய தற்போதைய சிக்கல்கள் பின்வருமாறு:

அ. உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல்.

ஆ. மிகவும் மட்டுப்படுத்தப்படட வளங்களே காணப்படுகின்றது.(மனித சக்தி மற்றும் உபகரணங்கள்).

இ. தகவல் தொழிநுட்ப படையணிக்கு தகைமையுடைய சிப்பாய்களின் தேவைப்படுகின்றனர்.

முடிவுரை

142. வரையறுக்கப்பட்ட வளங்களைக் கொண்டு இராணுவத்தின் தற்போதைய தகவல் தொழிநுட்ப தேவைப்பாட்டினை பூர்த்தி செய்வதற்கான நிலைப்பாட்டில் தகவல் தொழிநுட்ப பணிப்பக குழுமம் உள்ளது. எவ்வாறாயினும் இராணுவத்திலுள்ள அனைத்து அமைப்புக்களுக்கும் நடாத்தப்பட்ட வருடாந்த கணக்காய்வு நிகழ்ச்சிகள் மற்றும் செயல்படுத்தப்பட்ட விழிப்புணர்ச்சி நிகழ்ச்சிகளுக்கான வலையமைப்பு மற்றும் சைபர் பாதுகாப்பு களப் பணிகள் வழங்கப்பட்டது உறுதிப்படுத்தப்பட்டது. மேலும் 12 இலங்கை சமிஞ்சை படையணியின் கீழுள்ள அமைப்புகளின் கண்காணிப்பு பிரிவினால் சமூக வலைத்தளங்களுக்கு விசேட கவனம் செலுத்தப்பட்டது. இறுதியில் 2018-2019 ஆண்டுகளில் புதிய மென்பொருள் வேலைத்திட்டம் செயலாக்கப்பட்டதுடன் இராணுவ கட்டளை நிர்வாகம் பன்முகப்படுத்தப்பட்டதாக மாற்றப்பட்டது.

கவசவாகன படையணித் தலைமையகம்

143. இலங்கை கவசவாகன படையணியின் அனைத்து போரச் செயற்பாடுகளையும் ஒருங்கிணைப்பதற்காக மற்றும் கட்டளையிடுவதற்காக 01-ஜீலை 1988 ஆம்ஆண்டு கவசவாகன படையணி உருவாக்கப்பட்டது,மற்றும் கவசவாகன ரெஜிமென்ட்களின் இல்லாதொழிக்கப்பட்ட காரணத்தினால் தற்போது முற்று முழுதாக ஆயுதமயமாக்கப்பட்ட 02 கவசவாகன மற்றும் 02 ரெகன்சென்ஸ் ரெஜிமென்ட்களாக மாற்றப்பட்டுள்ளது. கவசவாகன படையணியின் கீழ் கவசவாகன பயிற்சி மையம் செயல்படுகின்றது. தற்போதைய மற்றும் எதிர்கால தேவைக்கமைய கவசவாகன மற்றும் ரெக்கனைசன்ஷ் ரெஜிமென்டிலுள்ளவர்களின் பயிற்சி வழங்கல் மற்றும் பணியமர்த்தல் இதன் முக்கிய பொறுப்பாகும்.

கவசவாகன படையணியின் பிரதான பங்கு

144. தீவிரவாத உள்ளீடுகள் நாட்டினது பாதுகாப்பினை பாதுகாத்தல் மற்றும் கவசவாகனங்களின் தனித்துவத்தினை பாதுகாப்பதற்காக பராமரித்தல் மற்றும் திருத்தல் கண்காட்சிகளுக்காக கவசவாகனங்களை வழங்குதல் நாடுகளில் காணப்படும் தேவைகளுக்காக கவசவாகனங்களை வழங்குதல்.

நிதி விபரங்கள்

145. 2018ஆம் ஆண்டிற்கான நிதி விபரங்கள்.

தொ இல	கணக்கின் பெயர்	ஒதுக்கீடுகள் (ரூ)	31.12.2018 ல் உள்ளவாறான மிகுதி (ரூ)
(அ)	(ஆ)	(இ)	(ஈ)
1.	பயிற்சி மாணியங்கள்	19,500.00	-
2.	நிலப் பராமரிப்பு	25,000.00	-
3.	சுத்தப்படுத்தல்	15,000.00	-
4.	எழுது கருவிகள்	150,000.00	-
5.	விளையாட்டுத்துறை	55,000.00	-
6.	முகாம்	20,000.00	-
7.	பத்திரிகை	17,300.00	-

அட்டவணை 3:34 இவ் ஆண்டிற்கான நிதி விபரங்கள்.

செலவுத்தலைப்புகளின் பயன்பாடுகள்

146. மூலதன மற்றும் மீண்டுவரும் முகாமைத்துவ செலவினங்களின் கீழான ஒதுக்கீடுகள் பின்வருமாறு:

தொ இல	கணக்கின் பெயர்	ஒதுக்கீடுகள் (ரூ)	31.12.2018 ல் உள்ளவாறான மிகுதி (ரூ)
(அ)	(ஆ)	(இ)	(ஈ)
1.	கவசவாகனங்களின் புதுப்பிப்பு மற்றும் அபிவிருத்தி	30,000,000.00	-
2.	கருவிகள் மற்றும் ஏனைய உபகரணங்கள்	14,000,000.00	-
3.	பெம்டோ பொருட்கள் மற்றும் உதிரிப் பாகங்கள	11,000,000.00	-
4.	வர்ணப்பூச்சு பொருட்கள்	1,250,732.00	-

அட்டவணை 3:35. மூலதன மற்றும் மீண்டுவரும் முகாமைத்துவ செலவினங்களின் வி-பரங்கள்

வருடத்திற்கான செயல்திறனாய்வு

147. பாடசாலைகள் மற்றும் கல்வி நிறுவனங்களில் நடாத்தப்பட்ட பின்வரும் கல்வி கண்காட்சிகளுக்கு கண்காட்சி கூடங்கள் தயாரிக்கப்பட்டது மற்றும் கவசவாகன வாகனங்கள் கண்காட்சிப்படுத்தப்பட்டது.

அ. 21 தொடக்கம் 25 வரை தெஹிவோட்டிய தேசிய பாடசாலையில் கவச வாகனங்களுடன் கண்காட்சி கூடம்.

ஆ. 22 தொடக்கம் 23 ஜனவரி வரை ஸ்ரீ மலிவான கனிஷ்ட பாடசாலையில் கவச வாகனங்கள் மற்றும் கண்காடசி கூடம்.

இ. 12 தொடக்கம் 14 ஜனவரி வரை மிஹிந்தலை மஹா வித்தியாலயத்தின் 701 ஆண்டு நிறைவை முன்னிட்டு கவச வாகனங்கள் மற்றும் கண்காடசி கூடம்.

ஈ. 28 மார்ச் தொடக்கம் 01 ஏபரல் வரை பண்டாரகம் வல்கம ஸ்ரீ சதாதிஸ்ஸ மஹா வித்தியாலயத்தின் கவச வாகனங்கள் மற்றும் கண்காடசி கூடம்.

உ. 22 தொடக்கம் 23 ஜனவரி வரை ஸ்ரீ மலிவான கனிஷ்ட பாடசாலையில் கவச வாகனங்கள் மற்றும் கண்காடசி கூடம்.

ஊ. நிக்கவரட்டியில் 28 மார்ச் 2018 தொடக்கம் 01 ஏபரல் 2018 வரை நடாத்தப்பட்ட யௌவன் புர தேசிய நிகழ்ச்சியில் 03 கவச வாகனங்கள் (01 x T55, 01 x BTR, 01 x BMP) வழங்கப்பட்டது.

எ. 06 ஏப்ரல் 2018 தொடக்கம் 07 நாட்கள் வரக்பொலவில் இடம்பெற்ற சிங்க மீலா கண்காட்சிக்கு 03 கவசவாகன தாங்கிகள் (01 x T55, 01 x BTR, 01 x BMP) வழங்கப்பட்டது.

ஏ. 06 ஏப்ரல் தொடக்கம் 08 ஏப்ரல் 2018 வரை ஸ்ரு சீதுவ நிர்தோச தேவமாதா பள்ளியின் ஜீஸ்வோஸ் சமூகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட கண்காட்சிக்கு கண்காட்சி கூடம் வழங்கப்பட்டது.

ஐ. சென் அல்வோசியஸ் கல்லூரி காலியில் கல்வி கண்காட்சிக்கு கண்காட்சி கூடம் வழங்கப்பட்டது.

ஒ. 12 தொடக்கம் 16 செப்டம்பர் 2018 வரையான காலி மல்ஹாரஸ் தேசிய பாடசாலையில் இடம் பெற்ற கல்வி கண்காட்சிக்கு கண்காட்சி கூடம் வழங்கப்பட்டது.

ஓ. பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாடடு மண்டபத்தில் 12 தொடக்கம் 14 ஒக்டோபர் 2018 வரையில் பொறியியற் கல்வி நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட டெக்னோ - 2018 ற்கு கவச வாகனங்கள் (01 x BTR, 01 x BMP) மற்றும் கண்காட்சி கூடம் வழங்கப்பட்டது.

ஔ. 12 தொடக்கம் 13 ஒக்டோபர் 2018 வரை மாவதகம் சமோதயாவில் நடைபெற்ற கார்டியன் இசை நிகழ்ச்சிக்கு 3 கவச வாகனங்கள் (01 x T55, 01 x BTR, 01 x BMP) வழங்கப்பட்டது.

அஅ. 28 தொடக்கம் 29 ஒக்டோபர் வரை இடம்பெற்ற மினிபுர கமுனு நாடா கண்காட்சி நிகழ்ச்சிக்கு T55 கவசவாகன தாங்கி வழங்கப்பட்டது.

அஆ. பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் 28 தொடக்கம் 29 ஒக்டோபர் வரை இலங்கை சமிஞ்சை படையணியின் 75வது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடாத்தப்பட்ட கண்காட்சிக்கு 02 கவசவாகனங்கள் (01 x BTR, 01 x BMP) வழங்கப்பட்டது.

அ3 28 தொடக்கம் 29 டிசம்பர் 2018 வரை நடாத்தப்பட்ட **“பபல மேல”** கண்காட்சிக்கு 02 BTR கவசவாகனங்கள் வழங்கப்பட்டது.

சிக்கல்கள் மற்றும் சவால்கள்

148. கவசவாகன படையணியினால் முகங்கொடுக்கப்பட்ட பிரச்சனைகள் பின்வருமாறு:

அ. எதிர்கால போர்ச் செயற்பாட்டு கடமைகளுக்காக நேரடி சூட்டு வளாகம் காணப்படாத காரணத்தினால் கவச வாகனங்களைக் கொண்டு சூட்டு பயிற்சிகளை நடாத்தல் கடினமாகவுள்ளதுடன் சூட்டு பயிற்சிகளுக்கான சிறந்த அனுபவத்தினை சிப்பாய்களுக்கு பெற்றுக்கொடுக்க முடியாதுள்ளது.

ஆ. நிதி ஒதுக்கீடுகளின் பற்றாக்குறையினால் கவச வாகனங்களை பராமரித்தல் மற்றும் திருத்துதல் கடினமாகவுள்ளதுடன் 2018ஆம் ஆண்டில் கவச வாகனங்களின் உதிரிப் பாகங்களை கொள்வனவு செய்வது சாத்தியமானதொன்றாக காணப்படவில்லை இதன் காரணமாக வினைத்திறனான போர்த் திறமைக்கு இது பாதிப்பாக அமையலாம்.

எதிர்காலத் திட்டமிடல்கள்

149. கவசவாகன படையணியின் எதிர்காலத் திட்டமிடல்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

அ. நேரலை துப்பாக்கி சூட்டு பயிற்சிக்கான துப்பாக்கி சூட்டு வளாகம் பெற்றுக் கொள்ளல்.

ஆ. நேரலை துப்பாக்கி சூட்டு பயிற்ச்சிக்கு முன் தாங்கி சூட்டாளர்களின் பயிற்சிக்கு ஆய்வுகள் மற்றும் அபிவிருத்திகள் திணைக்கம் மற்றும் பாதுகாப்பு அமைச்சின் அனுமதியுடன் T 55 சிமுயுலேட்டரினை உருவாக்கல்.

இ. தற்போது ஐக்கிய நாடுகள் பணிகளுக்காக 12 கவச வாகனங்கள்,04 அதிகாரிகள் மற்றும் 26 சிப்பாய்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர் மற்றும் எதிர்காலத்தில் மேற்குறிப்பிட்ட பணிக்காக கவசவாகனங்கள் சிலவும் வீரர்களையும் கைவசம் வைத்திருக்க வேண்டியுள்ளது.

முடிவுரை

150. இவ் ரெஜிமென்டிற்கு கீழுள்ள வீரர்களுக்கு பயிற்சிகள் மற்றும் நலன்புரி விடயங்களுக்கு முக்கியத்துவம் அழிக்கப்பட்டுள்ளது.மேலும் ஐக்கிய நாடுகள் பணிகளுக்காக பல எண்ணிக்கையிலான வீரர்களுக்கு பயிற்சி வழங்குவதற்கும் கவச வாகனங்களை திருத்தி மற்றும் கைவசம் வைத்திருப்பதற்கு உத்தேசிக்கப்படுகின்றது.

பீரங்கி படையணித் தலைமையகம்

151. பீரங்கிப் படையணித் தலைமையகம் 24 கார்த்திகை 1988 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. பீரங்கிப் படை பிரிவுகளிற்கு கீழுள்ள இராணுவ போர்ச் செயற்பாடுகள் மற்றும் போர்ச் செயற்பாடுகளுக்கான பணியாட்கள் போன்றவைக்கான திட்டமிடுதல் மற்றும் பீரங்கி விடயங்கள் தொடர்பான அனைத்து நடவடிக்கைகளுக்காகவும் இராணுவத் தலைமையகத்தினால் திட்டமிடப்படும் அனைத்து போர்ச் செயற்பாடுகளுக்கு உதவி வழங்குவதல் போன்ற செயற்பாடுகளுக்கு இது பொறுப்பாகும்.பீரங்கி படையணியானது இராணுவத் தளபதிக்கு பீரங்கி விடயங்கள் தொடர்பான செயற்பாடுகளுக்கு ஆலோசகராக செயற்படுகின்றது.பிரிகேடியர் நிலையிலுள்ள அதிகாரியினால் இப் படையணித் தலைமையகம் தலைமை தாங்கப்படுகின்றது. தலைமையகம் பிரதம பதவிநிலை அதிகாரிகள் கிளை - இராணுவத் தலைமையகத்தின் கீழ் பீரங்கிப் படையணி செயற்படுகின்றது.

நிதி விபரங்கள்

152. பீரங்கி படையணித் தலைமையகம் பெற்றுக் கொண்ட நிதி ஒதுக்கீடுகளின் விபரங்கள்:

தொ இல	செலவுத் தலைப்புகளுக்கான ஒதுக்கீடுகள்	பெற்றுக் கொண்ட நிதி (நிதி)	செலவினங்கள் (ரூ)
(அ)	(ஆ)	(இ)	(ஈ)
1.	அலுவலக பயன்பாட்டிற்காக எழுதுகருவிகள் கொள்வனவிற்காக ஒதுக்கீடுகள்	12,000.00	12,000.00
2.	வருடாந்த சஞ்சிகை கொள்வனவிற்கான ஒதுக்க டுகள்	7,440.00	7,440.00
3.	விளையாட்டு உபகரணங்களுக்கான ஒதுக்கீடுகள்	55,000.00	55,000.00
4.	எழுதுகருவிகளுக்கான ஒதுக்கீடுகள்	15,000.00	15,000.00
5.	முகாம் பராமரித்தலுக்கான ஒதுக்கீடுகள்	20,000.00	20,000.00
6.	நிலப் பாராமரிப்புக்கான ஒதுக்கீடுகள்	25,000.00	25,000.00

அட்டவணை 3:36. இவ் ஆண்டிற்காக பெற்றுக் கொண்ட நிதி ஒதுக்கீடுகள்.

153. பனாகொட இராணுவ முகாமில் தலைமையக கட்டிடம் அமைப்பதற்காக பொறியியற் சேவைகள் பணிப்பகத்திடமிருந்து பீரங்கி பிரிகேட் தலைமையகம் ரூ. 200,265.00 பெற்றுக் கொண்டது.

இவ் வருடத்திறகான செயல்திறனாய்வு

154. **பீரங்கிப் படை பயிற்சிகள்.** வருடாந்த பயிற்சி நாளேடு -2018 ற்கமைய பீரங்கிப் படையணி கண்காணிப்பின் கீழ் அதிகாரிகள் மற்றும் சிப்பாய்களின் துப்பாக்கி சுடுதலுக்கான அறிவினை மேம்படுத்துவதற்காக பீரங்கிப் படை பாடசாலை 21 பாடநெறிகள் நடாத்தப்பட்டது. கீழ் குறிப்பிடப்பட்ட எண்ணிக்கையிலான அதிகாரிகள் மற்றும் சிப்பாய்களுக்கு நடாத்தப்பட்ட பாடநெறிகளின் விபரங்கள் பின்வருமாறு:

தொ இல	பாடநெறி	மாணர்களின் எண்ணிக்கை	
		அதிகாரிகள்	சிப்பாய்கள்
(அ)	(ஆ)	(இ)	(ஈ)
1.	பீரங்கிப் படையணி	57	926
2.	ஏனைய ரெஜிமென்டஸ்	56	1,179
	மொத்தம்	**113**	**2,105**

அட்டவணை 3.37: பீரங்கிப் படை பயிற்சிகளின் விபரங்கள்.

155. **<u>துப்பாக்கி காட்சிப்படுத்தல் மற்றும் கண்காட்சிகள்.</u>** 2018 ஆம் ஆண்டின் சுதந்திர தின அணிவகுப்பு மற்றும் பலவேறுபட்ட அமைப்புகளுக்கு நடாத்தப்பட்ட கண்காட்சிகளுக்கு பீரங்கி படையணித் தலைமையகத்தினால் துருப்புகள் மற்றும் உபகரணங்கள் வழங்கி பங்களித்திருந்தது.

156. **<u>மரியாதை செலுத்தல் (துப்பாக்கி கௌரவங்கள்)</u>** அதிமேதகு ஜனாதிபதிகளின் வருகைகள், மாநிலங்கின் தலைவர்கள்,பல நாடுகளின் பிரதம மந்திரிகள் மற்றும் மரியாதைக்குரியோரின் மரணங்களுக்கு பீரங்கிப் படையணித் தலைமையகத்தினால் மரியாதை துப்பாக்கி வேட்டுக்கள் நடாத்தப்பட்டது.

157. **<u>சிவில் இராணுவ ஒத்துழைப்புகள்.</u>** நாட்டில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தங்களுக்கு நிவாரண உதவிகளுக்கு தேவையான வசதிகள் மற்றும் வளங்கள் பீரங்கிப் படையணித் தலைமையகத்தினால் வழங்கப்பட்டது. திடீர் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு மீட்பு நடவடிக்கைகளுக்காக இரும்பு குதிரை வாகனங்களும் சிப்பாய்களும் பொது மக்களின் ஒத்துழைப்புகளுக்கு வழங்கப்பட்டது.

<u>இவ் ஆண்டில் அடையப்பெற்ற இலக்ககள்</u>

158. நாட்டில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தங்களுக்கு அரச நிறுவனங்களுக்கு வழங்குவதற்காக இராணுவ தலைமையகத்தினால் பீரங்கிப் படையணியிடம் கேட்கப்பட்டிருந்த தயாரான நிலையிலுள்ள மற்றும் வினைத்திறனான ஒத்ததுழைப்புகள் தக்க சமயத்தில் வழங்கக் கூடியதாக இருந்தது.

<u>சிக்கல்கள் மற்றும் சவால்கள்</u>

159. இவ் ஆண்டில் மற்றும் எதிர்காலத்தில் முகங்கொடுக்கப்படவுள்ள சிக்கல்கள் மற்றும் பிரச்சனைகள் பின்வருமாறு:

அ. பீரங்கித் துப்பாய்கள் மற்றும் உபகரணங்களின் ஒழுங்கான பராமரிப்பிற்காக மற்றும் அவைகளின் எதிர்காலத் தேவைக்காக மற்றும் வேண்டப்படும் உதிரிப்பாகங்களின் கொள்வனவிற்கு மற்றும் துப்பாக்கிகள் மற்றும் உபகரணங்களின் திருத்தலுக்காக போதுமான ஒதுக்கீடுகள் ஒதுக்காமை.

ஆ. குறுகிய காலத்தில கிடைக்கப் பெற்ற தகவல்களின அடிப்படையில் பீரங்கிப் படையணித் தலைமையகத்தினால் துப்பாக்கிகள் காட்சிப்படுத்தப்பட்டு ˙காட்சிகளில் பங்குபற்ற வேண்டியுள்ளது, அதனால் துப்பாக்கிகள் மற்றும் கருவிகளை நகர்த்துவதற்கு உயர் தலைமையகங்களிலிருந்து அனுமதியனைப் பெறுவதற்கான நேரம் போதாமை மற்றும் கடினமாவுள்ளது.

<u>முடிவுரை</u>

160. இராணுவத் தலைமையகத்தின் வேண்டுகோளிற்கமைய பீரங்கிச் சொத்துக்களை கட்டுப்படுத்துவதற்கும் கட்டளையிடுவதற்காகவுமே பீரங்கிப் படையணித் தலைமையகம் உருவாக்கப்பட்டது. இராணுவத் தலைமையகத்தினால் வேண்டப்பட்ட அம்சங்களிற்கமைய பீரங்கிப் படையணித் தலைமையத்தினால் வெற்றகரமாக முகாமை செய்யப்பட்டது.

<u>பொறியியற் பிரிகேட் தலைமையகம்</u>

161. கள மற்றும் போர்ப் பொறியியல்,புவி நகர்வுகள், ஆலைப் பொறியியல்,நிர்மாணப் பொறியியல் மற்றும் மனிதாபிமான கண்ணி வெடி அகற்றல் செயற்பாடுகளை பிரதிநிதித்துவப்படுத்துவதற்கான இலங்கை இராணுவத்தில் ஒரே அமைப்பாக பொறியியற் படையணி மாத்திரமே காணப்படுகின்றது. பாதுகாப்பு படை மேற்கு மற்றும் மத்தியம் ஆகியவற்றின் கட்டுமானப் பணிகள் இப்படையணியிடம் கையளிக்கப்பட்டள்ளது.பொறுப்புக்களின் மாற்றங்கள் ஏற்றபட்டதனால் பணிகளை வெளிக்கொண்டு வருவதற்காக 06 நித்திய ரெஜிமென்ட்கள் மற்றும் 01 சுயேட்சை ரெஜிமென்ட்கள் ஒதுக்கப்பட்டது. பொறியியற் படையின் ஆளணியிலிருந்து 197 அதிகாரிகள் மற்றும் 4676 சிப்பாய்கள் குறைக்கப்பட்டனர். இப் படையணிக்கு வழங்கப்பட்ட கடமைகளை செய்து முடிப்பதற்காக புதிய கருவிகளுடன் படையணி புதிதாக மாற்றத்தினை முன்னோக்கிச் சென்று கொண்டிருந்தது. ஐக்கிய நாடுகளின் கடமைகளை எதிர்கொள்ளும் சவால்களை அடைவதற்காக சிப்பாய்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றது. மேலும் தேவைக்காக கண்ணி வெடிகள் அகற்றும் பணிக்காக இலங்கை இராணுவ மனிதாபிமான கண்ணி வெடி அகற்றல் பிரிவு இப் படையணியின் கீழ் செயற்பட்டு வருகின்றது.

புதிய பக்கத்திற்காக இவ்விடம் வெற்றிடமாக விடப்பட்டுள்ளது.

<u>நிதி நிலவரங்கள்</u>

162. <u>ஒதுக்கப்பட்ட செலவுத் தலைப்புகளின் விபரங்கள்.</u>

தொ இல	செலவுத் தலைப்பு	ஒதுக்கப்பட்ட தொகை (ரூ)	செலவுகளின் தொகை (ரூ)
(அ)	(ஆ)	(இ)	(ஈ)
1.	சுகாதாரப் பொருட்கள் செலவுத் தலைப்பு (222-01-2-1205(XXIV))	15,000.00	15,000.00
2.	நிலப் பராமரிப்பு செலவுத் தலைப்பு (222-01-2-1303(II))	25,000.00	25,000.00
3.	பத்திரிகைகள் கொள்வனவு ஒதுக்கீடுகள் (222-01-2-1205 (XVIII)	21,000.00	21,000.00
4.	முகாம் திருத்தல் செலவுத் தலைப்பு (1222-01-2-1302(III))	20,000.00	20,000.00
5.	பயிற்சிகள் மாணியம் (222-01-1-1409(XV))	27,000.00	19,660.00
6.	எழுதுகருவிகள் செலவுத் தலைப்பு (222-01-2-1201)	150,000.00	21,348.98
7.	கடமை புகையிரத வாரண்ட் (222-01-1-1101(I))	65,000.00	38,260.00
8.	கடமை பஸ் அனுமதிகள் (222-01-1-1101(II))	38,000.00	32,641.00

அட்டவணை 3:38. ஒதுக்கப்பட்ட செலவுத் தலைப்புகளின் விபரங்கள்

புதிய பக்கத்திற்காக இவ்விடம் வெற்றிடமாக விடப்பட்டுள்ளது.

இவ் ஆண்டிற்கான செயலதிறனாய்வு

163. அபிவிருத்தி வேலைத்திட்டங்களின் வளர்ச்சி.

தொ இல	வேலைத்திட்டம் இடம்பெறும் பிரதேசம்	வேலைத்திட்டத்தின் விபரம்	மதிப்பிடப்பட்ட கிரயம் (ரூ)	குறிப்புகள்
(அ)	(ஆ)	(இ)	(ஈ)	(உ)
1.	கிளிநொச்சி	கிளிநொச்சி-யாழ்ப்பாண பல்கலைகழகத்தின் விவசாய பீடத்தின் கட்டிடங்களை தகர்த்தல	744,966.05	பூரணப்படுத்தப்பட்டுள்ளது.
2.	கொழும்பு	ஆனந்த கல்லூரியின் ரக்கர் மைதானத்தை புனரமைத்தல்	461,070.70	பூரணப்படுத்தப்பட்டுள்ளது.
3.	அம்பாறை	வாரங்கெடகொட மஹா வித்தியாலயத்தின் மைதானம் நிர்மாணித்தல்	2,500,000.00	பூரணப்படுத்தப்பட்டுள்ளது.
4.	குருநாகல்	பாதுகாப்பு சேவைகள் கல்லூரியின் ஆலைப் பொறியியற் வேலை	1,564,609.52	நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது
5.	மத்தல	மத்தல் விமான நிலையத்தின் சுற்றியுள்ள காடுகள் துப்பரவாக்கப்பட்டது.	6,361,009.41	நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது
6.	மீதொட்டுமுல்ல	பயலட் வேலைத்திட்டம் குப்பகைள் அகற்றல்	11,965,852.00	நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது
7.	களணி	எகொட களணி விகாரையில் குளம் நிர்மாணிப்பு	1,675,432.65	நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது
8.	புத்தளம்	தப்போவ காட்டில் களப்பு அன்டாரா நீக்கம்	5,392,114.82	நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது
9.	மடு தேவாலயம்	உள்ளக வீதி வலையமைப்பு புனமைப்பு	6,012,577.75	90% பூரணப்படுத்தப்பட்டுள்ளது.
10.	கிளிநொச்சி	விவசாய பீடம் - யாழ்ப்பாண பல்கலைகழகத்தில் 15 ஏக்கர் காடு துப்பரவாக்கப்பட்டது.	417,833.64	பூரணப்படுத்தப்பட்டுள்ளது.
11.	யாழ்ப்பாணம்	வடமராட்சி பிரதேச சபை குப்பைகள் மறுசுழற்சி வேலைத்திட்டம்	4,056,348.00	செயற்பாடுகள் தற்காலிமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது
	மதிப்பிடப்பட்ட கிரயத்தின் மொத்தம் (ரூ)		**41,151,814.29**	

அட்டவணை 3:39. அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் வளர்ச்சி

164. **<u>சிரிசர பிவிசும அபிவிருத்தி வேலைத்திட்டம்.</u>** இவ் வேலைத்திட்டமானது சிரிசர பிவிசும வேலைத்திட்டத்தினால் முகாமை செய்யப்படுகின்றது. 2018 ஆம் நடுப்பகுதியில் இவ் வேலைத்திட்டத்தின் பொறுப்பு சிரிசர வேலைத்திட்ட அலுவலகத்திடம் பெறப்பட்டது.

தொ இல	பிரதேசம்	விபரம்	மதிப்பிடப்பட்ட கிரயம் (ரூ)
(அ)	(ஆ)	(இ)	(ஈ)
1.	கொமாரக்கடவல	பக்மீகம வாவி புதுப்பித்தல்	21,566,634.43
2.	கொமாரக்கடவல	பக்மீகம கூட திம்பிரி வாவியின் புனரமைப்பு	2,616,758.29
3.	கொமாரக்கடவல	இஹல காலி வாவியின் புனரமைப்பு	3,217,039.26
4.	கந்தளாய்	துட்டு வாவியின் புனரமைப்பு	22,566,162.01
	மதிப்பிடப்பட்ட மொத்த தொகை		**49,966,593.99**

அட்டவணை 3:40. சிரிசர பிவிசும வேலைத்திட்டத்தின் கீழ் செயற்படுத்தப்பட்ட வேலைத்திட்டங்கள்.

165. **<u>பிபிதெமு பொலன்னறுவ அபிவிருத்தி வேலைத்திட்டம்.</u>** இவ் வேலைத்திடடம் பிபிதெமு பொலன்னறுவ வேலைத்திட்ட அலுவலகத்தின் கீழ் நேரடியாக முகாமை செய்யப்படுகின்றது.

தொ இல	பிரதேசம்	விபரம்	மதிப்பிடப்பட்ட கிரயம் (ரூ)
(அ)	(ஆ)	(இ)	(ஈ)
1.	அலிகிம்புலாவ	அலிகிம்புலாவல மைதானம் நிர்மாணிப்பு	986,528.35
2.	கதுருவெல	அல் - ஆமினா கல்லூரியின் மைதானம் புனரமைப்பு	506,708.78
3.	அருனா வேவா	அருன வாவியின் புனரமைப்பு	2,609,763.73
4.	கிரிமாதிபிடிய	கிரிமபிடியவின் வாவியின் புனரமைப்பு	2,338,565.78
5.	சந்ததன பொகும	சந்தன பொகுன வாவி புனரமைப்பு	2,665,521.97
	மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம்		**9,107,088.61**

அட்டவணை 3:41. பிபிதெமு பொலன்னறுவையால் செய்படுத்தப்பட்ட வேலைத்திட்டங்களின் விபரங்கள்.

புதிய பக்கத்திற்காக இவ்விடம் வெற்றிடமாக விடப்பட்டுள்ளது.

166. **ஆலை மற்றும் மனித வளங்களின் பங்களிப்புடனான அபிவிருத்தி வேலைத் திட்டங்கள்.** பொறியியற் படையணியால் ஆலை மற்றும் மனித வளங்கள் வழங்கப்பட்டு மேற்கொள்ளப்பட்ட வேலைத் திட்டங்கள் பின்வருமாறு:

தொ இல	பிரதேசம்	விபரங்கள்	வழங்கப்பட்ட ஒத்துழைப்புகள்
(அ)	(ஆ)	(இ)	(ஈ)
1.	திருகோணமலை	சிறிசர பிவிசுமவின் கீழ் நீர்ப்பாசன முறைமை புனரமைக்கப்பட்டது.	ஆலை பொறியியலாளர்
2.	பொலன்னறுவை	பிபிதெனு பொலன்னறுவை கீழ் நீர்ப்பாசன முறைமை புனரமைக்கப்பட்டது.	ஆலை பொறியியலாளர்
3.	கண்டி	கண்டி வைத்தியசாலை புற்று நோய் வாட்டிற்கு அடித்தள அமைத்தல்.	ஆலை பொறியியலாளர்
4.	புத்தள	'வச விச நெதி ரடக்' உரம் உற்பத்தி திட்டம்.	ஆலை பொறியியலாளர்
5.	கொழும்பு	களணி ராஜமஹா விகாரையின் நிர்மாணப் பணிகள்	மனித வளங்கள்
6.	அகுரேகொட	பாதுகாப்பு தலைமையகத்தின் நிர்மாணப் பணிகளுக்கு ஆலைகள் மற்றும் விஷேட தொழிநுட்ப உதவிகள் வழங்கப்பட்டது.	ஆலை பொறியியலாளர் மற்றும் மனித வளங்கள்
7.	வலிவேரிய	மாற்றுத் திஏனுடைய சிறார்களுக்கு கட்டிடம் அமைக்கப்பட்டது.	மனித வளங்கள்
8.	குருநாகல்	வட மேற்கு மாகாணத்தின் மாகாணசபை கட்டிடம் பனரமைக்கப்பட்டது.	மனித வளங்கள்
9.	கொழும்பு	சிறிமாவோ பண்டாரநாயக்க வித்தியாலயத்தின் உள்ளக அரங்கம் நிர்மாணிக்கப்பட்டது.	மனித வளங்கள்
10.	எம்பிலிபிட்டிய	ஸ்ரீ போதிராஜராம விகாரையில் நான்கு மாடிக் கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டது.	மனித வளங்கள்
11.	தெல்தெனிய	2 தொன் புத்தர் சிலை வெள்ளவாயில் இருந்து ரங்கல தியான நிலையத்திற்கு கொண்ட செல்லப்பட்டது.	மனித வளங்கள்
12.	கந்தான	டி மஷ்னாத் கல்லரி மைதானம் நிர்மாணிக்கப்பட்டது.	ஆலை பொறியியலாளர்
13.	பானதுறை	கொரகான விகாரை அஸ்திவாரப் பிரிவு நிர்மாணம்	ஆலை பொறியியலாளர்
14.	இப்பாகமுவ	பிரிவு அமைத்தல் - தொழிற்முறை பயிற்சி நிலையம் மற்றும் பயன்பாட்டிற்கான கட்டிடம் தம்பிலி கும்புர கல் விகாரையில் அமைக்கப்பட்டது.	ஆலை பொறியியலாளர்
15.	தரணியகல	நக்காவிட்ட ஆரம்ப கல்லூரிக்கு மைதானம் நிர்மாணிக்கப்பட்டது.	ஆலை பொறியியலாளர்

அட்டவணை 3:42. பொறியியற் சொத்துக்கள் மூலம் அபிவிருத்தி வேலைத் திட்டங்கள்.

167. நீர்ப்பாசன முறைமையுடன் இணைந்து சிரசர பிவிசும மற்றும் பிபிதெமு பொலன்னறுவை வேலைத்திட்டம் புனரமைப்பு.

168. மீதொட்டுமுல குப்பைகள் மீள்சுழற்சி ஆலை பொறியியலின் ஒத்துழைப்புடன் நடைபெற்றது.

169. எம்பிலிபிடிய போதிராஜம விகாரை நிர்மாணம்.

170. வாரங்கெட்டகொட வித்தியாலயம் புனரமைப்பு.



171. தப்போவ பற்றைகள் நீக்கல் வேலைத்திட்டம்.

மனிதாபிமான கண்ணிவெடி அகற்றலின் முன்னேற்றங்கள்

172. இவ் ஆண்டில் இலங்கை இராணுவத்தினால் மனிதாபிமான கண்ணிவெடி அகற்றல் பிரிவினால் முன்னெடுக்கப்பட்ட இலக்குகள் பின்வருமாறு:

தொ இல	தொழிநுட்ப அல்லாத கருத்தாய்வு (M2)	கை முறைகள் மூலம்	இயந்திரம் மூலம் (M2)	கண்ணி வெடி துப்பறியும் நாய் (M2)	மொத்தம் (M2)	மனிதர்களு-க்கு எதிரான கண்ணி வெடி	வெடிக்காத போர் உப-கரணங்கள்
(அ)	(ஆ)	(இ)	(ஈ)	(உ)	(ஊ)	(எ)	(ஏ)
1.	1,095,654	216,913	6,553	75,327	1,394,447	6,104	461

அட்டவணை 3:43. மனிதாபிமான கண்ணி வெடி அகற்றப்பட்ட காணிகளின் விபரங்கள்.

புதிய பக்கத்திற்காக இவ்விடம் வெற்றிடமாக விடப்பட்டுள்ளது.

173. 01.01.2018 தொடக்கம் 31.01.2018 வரை இலங்கை இராணுவ மனிதாபிமான கண்ணி வெடி அகற்றல் பிரிவினால் அகற்றப்பட்ட காணிகளின் விபரங்கள் எவ்வாறியினும் நிதிப் பற்றாக்குறை காரணமாக கண்ணி வெடி அகற்றல் செயற்பாடுகள் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

தொ இல	அபாயத்தின் அடையாளம்	கிராம சேவகர் பிரிவு	மாவட்டம்	ஆரம்பிக்க-ப்பட்ட திகதி	இடைநிறு-த்தப்பட்ட திகதி	அப்புறப்படு-த்தப்பட்ட பரப்பு (சதுர பரப்பு)
(அ)	(ஆ)	(இ)	(ஈ)	(உ)	(ஊ)	(எ)
1.	MF-KI-759	KN 95 - கிலாலி	கிளிநொச்சி	30/09/2017	16/01/2018	21,635
2.	MF-KI-759	KN 95 - கிலாலி	கிளிநொச்சி	17/01/2018	09/05/2018	41,312
3.	MF-KI-759	KN 95 - கிலாலி	கிளிநொச்சி	10/05/2018	24/06/2018	27,437
4.	N-DA-VA-1243	பஹால புலியங்குளம்	புத்தளம்	11/11/2017	30/06/2018	18,233
5.	N-DA-TR-194	உனுவதுர புபுல	அம்பாறை	06/11/2017	10/04/2018	13,530
6.	N-DA-TR-198	சிங்கபுர	பொலன்னறுவை	23/04/2018	31/05/2018	5,825
7.	N-DA-VA-1145	நெலும்வில	அநுராதபுரம்	01/08/2016	05/04/2018	71,062
8.	N-DA-KI-1069	பொன்னகர்	கிளிநொச்சி	27/02/2018	27/02/2018	10,446
9.	N-DA-KI-1070	பொன்னகர்	கிளிநொச்சி	12/03/2018	17/03/2018	186,354
10.	N-DA-KI-1071	பொன்னகர்	கிளிநொச்சி	12/06/2018	19/12/2018	169,766
11.	N-DA-KI-1095	பொன்னகர்	கிளிநொச்சி	12/06/2018	19/12/2018	2,601
12.	N-DA-VA-1253	வன்னிவலங்குளம்	முல்லைத்தீவு	02/01/2018	07/04/2018	72,223
13.	N-DA-VA-1253	வன்னிவலங்குளம்	முல்லைத்தீவு	09/04/2018	06/06/2018	71,771
14.	N-DA-JA-325	வடக்கு - மயிலடி	யாழ்ப்பாணம்	20/02/2017	30/03/2018	45,558
15.	N-DA-JA-329	வடக்கு - மயிலடி	யாழ்ப்பாணம்	02/05/2018	09/05/2018	381,302
16.	DA-VA-587	குமுலமுனை கிழக்கு	முல்லைத்தீவு	28/05/2014	16/06/2018	96,902
17.	N-DA-TR-1007	கலமெட்டியாவ வடக்கு- 228 L	திருகோணமலை	07/05/2017	15/07/2018	29,903
18.	N-DA-VA-1195	கொக்குதொடுவாய் வடக்கு	முல்லைத்தீவு	08/08/2017	19/03/2018	13,991
19.	N-DA-VA-1195	கொக்குதொடுவாய் வடக்கு	முல்லைத்தீவு	30/03/2017	14/06/2018	40,858
	மொத்தம்					**1,320,709**

அட்டவணை 3:44. கண்ணிவெடி அகற்றப்பட்ட விபரங்கள்.

174. கண்டறியப்பட்ட கண்ணி வெடி மற்றும் கண்ணி வெடி வெடிப்புக்காக பயன்படுத்தப்பட்ட நாய்கள் தொடர்பான விபரங்கள்.

தொ இல	01.01.2018ல் உள்ளவாறான ஆளணி		புதிதாக பயிற்றப்பட்டவர்கள்		பரிமாற்றங்கள் கழித்தல் முறையாக		ஓய்வு பெற்றவர்கள்		சுகயீனமுற்றவர்கள்		தற்போதைய ஆளணி (பணியமர்த்தக் கூடிய)	
	கண்ணி வெடி துப்பறியும் நாய்	வெடிபொருள் துப்பறியும் நாய்	கண்ணி வெடி துப்பறியும் நாய்	வெடிபொருள் துப்பறியும் நாய்	கண்ணி வெடி துப்பறியும் நாய்	வெடிபொருள் துப்பறியும் நாய்	கண்ணி வெடி துப்பறியும் நாய்	வெடிபொருள் துப்பறியும் நாய்	கண்ணி வெடி துப்பறியும் நாய்	வெடிபொருள் துப்பறியும் நாய்	கண்ணி வெடி துப்பறியும் நாய்	வெடிபொருள் துப்பறியும் நாய்
(அ)	(ஆ)	(இ)	(ஈ)	(உ)	(ஊ)	(எ)	(ஏ)	(ஐ)	(ஒ)	(ஓ)	(ஔ)	(அஃ)
1.	12	14	2	1	1	2	1	0	0	1	12	12

அட்டவணை 3:45. பொறியியற் படையணியினால் அகற்றப்பட்ட கண்ணி வெடிகளின் நிலவரங்கள்.

<u>2018 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட பாடநெறிகள் பின்வருமாறு:</u>

175. 2018ஆம் அதிகாரிகள் மற்றும் சிப்பாய்களுக்கு நடாத்தப்பட்ட பாடநெறிகள் கீழே அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளன.

<table>
<tr><th rowspan="2">தொ இல</th><th rowspan="2" colspan="2">பாடநெறி</th><th rowspan="2">ஆரம்பம்</th><th rowspan="2">முடிவு</th><th colspan="2">ஆளணி</th></tr>
<tr><th>அதிகா-ரிகள்</th><th>சிப்பாய்கள்</th></tr>
<tr><th>(அ)</th><th colspan="2">(ஆ)</th><th>(இ)</th><th>(ஈ)</th><th>(உ)</th><th>(ஊ)</th></tr>
<tr><td>1.</td><td colspan="2">அடிப்படை மனிதாபிமான கண்ணி வெடி அகற்றல்</td><td>21.03.2018</td><td>10.05.2018</td><td>07</td><td>43</td></tr>
<tr><td>2.</td><td colspan="2">வெடிக்கும் போர் உபகரணங்கள் அகற்றல் பாடநெறி மட்டம் 111</td><td>06.02.2018</td><td>02.03.2018</td><td>07</td><td>01</td></tr>
<tr><td>3.</td><td colspan="2">பொறியியல் அதிகாரிகள் இளம் அதிகாரிகள் பாடநெறி - 09, பூமி நகர்வு ஆலைகள் செயல்முறை</td><td>22.04.2018</td><td>10.06.2018</td><td>08</td><td>00</td></tr>
<tr><td>4.</td><td rowspan="4">இரசாயன, உயிரிய, கதிரியிக்கவியல், அணுசக்தி அறிமுக பாடநெறி. அனர்த்த கண்காணிப்பு மற்றும் தேடல் மற்றும் மீட்பு மற்றும் போர் உபகரணங்கள் வெடிப்பு அகற்றல்.</td><td>இ.இ.இ.பொ</td><td>15.02.2018</td><td>28.02.2018</td><td>04</td><td>34</td></tr>
<tr><td>5.</td><td>இ.இ.இ.பொ</td><td>24.05.2018</td><td>08.06.2018</td><td>10</td><td>22</td></tr>
<tr><td>6.</td><td>14 இ.உ.க.அ. இலங்கை பொறியியற் ரெஜிமென்டல.</td><td>09.07.2018</td><td>20.07.2018</td><td>00</td><td>19</td></tr>
<tr><td>7.</td><td>பொறியிய பிரிகேட்</td><td>08.10.2018</td><td>20.10.2018</td><td>04</td><td>26</td></tr>
<tr><td>8.</td><td rowspan="3">தேசிய தொழில்முறை தகைமைகள் நடாத்தப்படும் தொழில்முறை பயிற்சி பிரிவு இ.இ.இ.பொ</td><td>மின்னியல் வல்லுனர்</td><td>01.01.2018</td><td>30.06.2018</td><td>00</td><td>13</td></tr>
<tr><td>9.</td><td>தச்சு</td><td>01.01.2018</td><td>30.06.2018</td><td>00</td><td>13</td></tr>
<tr><td>10.</td><td>மேசன்</td><td>01.01.2018</td><td>30.06.2018</td><td>00</td><td>11</td></tr>
<tr><td></td><td colspan="4">மொத்தம்</td><td>40</td><td>182</td></tr>
</table>

அட்டவணை 3:46. நடாத்தப்பட்ட பாடநெறிகளின் விபரங்கள்.

<u>எதிர்கால சவால்கள் மற்றும் முன்னேற்றங்கள்</u>

176. எதிர்கால சவால்கள் இலங்கை கவசவாகன படையணியின் அனைத்து போரச் செயற்பாடுகளையும் ஒருங்கிணைப்பதற்காக மற்றும் கட்டளையிடுவதற்காக 01-ஜீலை 1988 ஆம் ஆண்டு கவசவாகன படையணி உருவாக்கப்பட்டது,மற்றும் கவசவாகன ரெஜிமென்ட்களின் இல்லாதொழிக்கப்பட்ட காரணத்தினால் தற்போது முற்று முழுதாக ஆயுதமயமாக்கப்பட்ட 02 கவசவாகன மற்றும் 02 ரெகன்சென்ஸ் ரெஜிமென்ட்களாக மாற்றப்பட்டுள்ளது. கவசவாகன படையணியின் கீழ் கவசவாகன பயிற்சி மையம் செயல்படுகின்றது. தற்போதைய மற்றும் எதிர்கால தேவைக்கமைய கவசவாகன மற்றம் ரெக்கனைசன்ஷ் ரெஜிமென்டிலுள்ளவர்களுக்கு பயிற்சி வழங்கல் மற்றும் பணியமர்த்தல் இதன் முக்கிய பொறுப்பாகும்.

177. **<u>தொழிநுட்ப முன்னேற்றம்.</u>** மனிதாபிமான கண்ணி வெடி அகற்றல் தேடுதல் மற்றும் மீட்பு பணிகள் மற்றும் அனர்த்த் நிவாரண பணிகள் போன்ற செயற்பாடுகளில் வினைத்திறனாக செயற்படுவதற்கு புவியியல் தகவல் முறைமையில் விஷேட அறிவாற்றலை எதிர்காலத்தில் கற்றுக் கொடுப்பதற்காக நடவடிக்கைகளை செயற்படுத்தியுள்ளது. கண்ணிவெடிகளை அகற்றல் மற்றும் கண்ணி வெடி அகற்றப்படும் போது வெடிப்புகள் மேற்கொள்ளும் சந்தர்ப்பத்தில் பலியாகும் மனித உயிர்களை கட்டுப்படுத்துவதோடு வினைத்திறனான பயன்களையும் பெற்றுக் கொள்ளக் கூடியதாகவுள்ளது.

178. **<u>வெளிநாட்டு வேலைவாய்ப்புகள்.</u>** உலகின் எப் பகுதியிலும் இடம்பெறும் அனர்த்த நிவாரண செயற்பாடுகளுக்காகவும் ஐக்கிய நாடுகளின் பணிகளுக்காகவும் இப் படையணி சிப்பாய்களை வழங்கத் தயாராகவுள்ளது.

முடிவுரை

179. இராணுவ மற்றும் அரசாங்கத்தின் சொந்த நிறுவனங்களின் அறிவுபூர்வமான மற்றும் வினைத்திறனான பொறியியற் பணிகள் மற்றும் வேலைத்திட்டங்களுக்கு இப் படையணி இணைந்துள்ளது. மனிதாபிமான கண்ணிவெடி அகற்றல் நிகழ்ச்சியின் ஊடாக இலங்கையில் கண்ணி வெடி அகற்றல் செயற்பாடுகள் இடம் பெற்றது. இலங்கை இராணுவம் மற்றும் படைப்பிரிவுகளால் பேணப்படும் எவ்வகை கள, ஆலை மற்றும் நிர்மாண பொறியியல் தேவைகளுக்காக தனது சிப்பாய்களை வழங்க இப் படையணித் தலைமையகம் தயாராகவுள்ளது.

ஆலை பொறியியற் பிரிகேட் தலைமையகம்

180. இராணுவ கட்டளைச் சட்டம் ஜி/எஸ்டீ/51/04 (இ.க.ச) 16/2018 09.06.2018 ஆலை பொறியியற் பிரிகேட் தலைமையகம் உருவாக்கப்பட்டது.இராணுவத் தளபதியின் மிக முக்கிய இலக்குகளில் ஒன்றான தேசத்தின் அபிவிருத்திக்காக தேசத்ததை கட்டியெழுப்பும் செயற்பாடுகளை பூர்த்தி செய்வதில் பிரதான பங்கினை வகிக்கின்றது. பிரதான கள பொறியியற் தலைமையகத்தின் கீழ் செயற்பாடுகளுக்காக செயற்படுகின்றதோடு, நிர்வாக நடவடிக்கைகளுக்காக இலங்கை பொறியியற் ரெஜிமென்டல் நிலையத்தின் கீழ் செயற்படுகின்றது.

181. ஆலை பொறியற் பிரிகேட் தலைமையகத்தின் பணிகள் பின்வருமாறு:

அ. அனைத்து நிர்மாணங்கள், புனரமைப்புகள், இராணுவத் தலைமையகம் மற்றம் பாதுகாப்பு அமைச்சினால் பூர்த்தி செய்யப்படுவதற்கு அறிவுறுத்தப்படும் புதிய நிர்மாணங்கள் ஆகியவற்றினை வடிவமைத்தல் திட்டமிடல்.

ஆ. புதிய நிர்மாணங்கள், புனரமைப்புகளுக்கு இயந்திர மற்றும் தொழிநுட்ப வசதிகள் வழங்கல்.

இ. விஷேட தேசிய திட்டம் பங்குதாரர்களுடன் தொடர்புடைய கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டது. (ஆலை மற்றும் களப் பொறியியற் திட்டங்கள்)

ஈ. இணைய அமைச்சுக்கள் உள்நாட்டு அதிகார சபைகள் மறும் பாதுகாப்பு படை(மேற்கு) மற்றும் (மத்தியம்) அனுமதிகளுடன் இணைந்து சிவில் இராணுவ ஒத்துழைப்புகள் வழங்கப்பட்டது.

உ. வழங்கப்பட்ட நேரத்திற்கமைய அனைத்து திட்டங்களினையும் பூரணப்படுத்துவதற்கு கண்காணிக்கப்பட்டனர்.

நிதியியல் விபரங்கள்

182. 2018 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீடுகள் பின்வருமாறு:

தொ இல	செலவுத் தலைப்பு இலக்கம்	பெற்றுக் கொண்ட தொகை (ரு)	செலவினங்கள் (ரு)	மிகுதி (ரு)
(அ)	(ஆ)	(இ)	(ஈ)	(உ)
1.	நிலப் பராமரிப்பு (222-01-2-1303(11))	20,000.00	20,000.00	-
2.	சுத்தப்படுத்தல் (222-01-2-1205(xxiv))	5,000.00	5,000.00	-
3.	பயிற்சி மாணியங்கள் (222-01-1-1409(xv))	12,000.00	12,000.00	-
4.	எழுது கருவிகள் (222-01-02-1201)	50,000.00	50,000.00	-

அட்டவணை 3:47. 2018 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீடுகள்.

<u>செலவுத் தலைப்புகளின் பயன்பாடுகள்</u>

183. இத் தலைமையகமானது பயிற்சிகள் மானியத்தினூடாக எழுது கருவிகள் கொள்வனவிற்காக ஒதுக்கீடுகள் பயன்படுத்தப்பட்டது.நிலப் பராமரிப்பு நிதியத்தினூடாக தோட்டம் மற்றும் புல் வெளிகள் பராமரிக்கப்பட்டது.

<u>இவ் ஆண்டிற்கான செயல் திறனாய்வு</u>

184. ஜனாதிபதி செயலகத்தினால் நடாத்தப்படும் கிராமசக்தி திட்டத்தின் கீழ் மஹாவிலாச்சிய பிரதேசத்தில் கஸ்கடே முறைமையின் கீழ் புனரமைப்புகள் ஆரம்பிக்கப்பட்டது.

185. கம்பெரலிய திட்டத்தின் கீழ் குருநாகல் மாவட்டத்தில் முடுத்துவ வாவி ரஷ்னயகபுர மாவட்ட செயலக பிரிவில்கனுகெட்டிய நீர்ப்பாசன தாங்கி புனரமைப்புகள் ஆரம்பிக்கப்பட்டது.

186. கம்பரெலிய திட்டத்தின் கீழ் மொனராகலை மாவட்டத்தில் மீயாகெட்டு ஆர வாவி மற்றும் கொஸ்கம வாவியின் புனரமைப்புகள் ஆரம்பிக்கப்பட்டது.

187. விவசாய அபிவிருத்தி திணைக்களத்தின் கீழ் வவுனியா மாவட்டத்தில் மெட்குளம், எய்பன்ரிதியகுளம், சின்னப்புளியங்குளம் மற்றும் கடையராகுளம் புனரமைப்புகள் ஆரம்பிக்கப்பட்டது.

188. **<u>தப்போவ கலப்பு அன்தர வேலைத்திட்டம்</u>**. 100 ஹெக்டேயர் பொது இடங்களிலுள்ள காணியில் லகூன் அன்தர பற்றைகள்வேரோடு பிடுங்கப்பட்டன.ஆரம்பத்தில் 50 ஹெக்டேயர்ஸ்களில் பயலட் வேலைத்திட்டத்துடன் செயற்படுத்த தீர்மானிக்கப்பட்டது மற்றும் தற்போது 33.8 ஹெக்டேயர்ஸ்களில் பூரணப்படுத்தப்பட்டுள்ளது. வெட்டப்பட்ட இப் பற்றைகள் சந்தா ஹிரு சேயா செங்கற்கள் சூலையின் விறகுக்காக பயன்படுத்தப்பட்டது.

189. களணி ராஜமஹா விகாரை புனரமைப்பு மற்றும் நிர்மாணம்.

190. எகொட களணியில் குளம் புனரமைப்பு.

191. பாமில பாடசாலை புனரமைப்பு (அத்தேகொட).

192. **<u>மீதொட்டுமுல க்ளோஸர் மற்றும் புனர்வாழ்வு திட்டம்</u>.** நடைபாதை கழிவு நீர் அகற்றல் நிர்மாணம் 30 மீற்றர x 50 மீற்றர் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

193. பாதுகாப்பு படை தலைமையகம் மேற்கு மற்றும் மத்தியத்திற்கு பொறுப்பான பிரதேசங்களுக்கு இராணுவ ஆலைகள் மற்றும் களப் பொறியயிற் பணிகள் வழங்கப்பட்டது.

<u>இலக்குகள்.</u>

194. குருநாகல் மாவட்டத்தின் முடுத்தாவ வாவி புனரமைப்பு பூர்த்தி செய்யப்பட்டது.

195. விவசாய அபிவிருத்தி திணைக்களத்தின் கீழ் வவுனியா மாவட்டத்தில் மெட்குளம், எய்பன்ரிதியகுளம், சின்னப்புளியங்குளம் மற்றும் கடையராகுளம் புனரமைப்புகள் பூர்த்தி செய்யப்பட்டது.

196. மஹாவிலாச்சிய பிரதேசத்தின் இஹலமிலாகொல்லாவ தாங்கி மற்றும் மஹாமில்லாகொல்லாவ தாங்கி புனரமைப்புகள் பூர்த்தி செய்யப்பட்டது.

<u>சிக்கல்கள் மற்றும் சவால்கள்</u>

197. ஆலை பொறியியற் இயந்திரங்கள் (இட நகர்வுகள் இயந்திரங்கள்) அனைத்து அரச மற்றும் இராணுவ திட்டங்களை மேற்கொள்வதற்கு போதுமானதாகவில்லை.

<u>முடிவுரை</u>

198. தேசத்தை கட்டியெழுப்பும் அனைத்து பணிகளுக்கும் நிர்வாக மற்றும் ஒருங்கிணைப்புகளை வழங்குகின்றது.இராணுவத் தளபதி மற்றும் பிரதான களப் பொறியியலாளருக்கு ஆலைகள் பொறியியற் பிரிகேட் தொடர்புடைய அனைத்து விடயங்களுக்கும் பொறுப்பாகும்.

சமிஞ்சை படையணித் தலைமையகம்

199. இராணுவ கட்டளைச்ச சட்டம் 18-94 ற் கமைய இலங்கை இராணுவத்தின் தொடர்பாடல் படையணியாக சமிஞ்சை படையணி உருவாக்கப்பட்டது.சமிஞ்சை படையணியின் முக்கிய பணியாக கட்டளைகளுக்கமைய தேவைப்படுமிடத்து தொடர்பாடல்களை வழங்கல் மற்றும் சமாதானம் மற்றும் போர் நடவடிக்கைகளின் போது தொடர்பாடல் துறையை கட்டுப்படுத்தல் மற்றும் நிர்வாகித்தல் என்பனவாகும்.

200. சமிஞ்சை படையணியின் பொறுப்புகளாவன:

அ. இராணுவத்திலுள்ள சமிஞ்சை ரெஜிமென்ட்ஸ் மற்றும் சிஞ்சை சுயாதீன அமைப்புகளுக்கு கட்டளைகளை வழங்கல் மற்றும் கட்டுப்டுத்தல்.

ஆ. சமிஞ்சை சிப்பாய்களை பணியமர்த்தல் மற்றும் தொடர்பாடல் கருவிகளை வழங்கல் மற்றும் சிறந்த முறையிலான ஒதுக்கீடுகள்.

இ. க்ளாசிக் சமிஞ்சை படையணிக்கு வழங்கப்பட்ட ஒதுக்கீடுகளின் பயன்பாட்டினை கண்காணித்தல் மற்றும் மேற்பார்வை செய்தல்.

ஈ. பிரதான சமிஞ்சை அதிகாரியின் அறிவுறுத்தலுக்கமைய இராணுவ தலைமையகம் பயிற்சிகள் குறிப்பேட்டிலுள்ள பயிற்சிகள் நடாத்தப்பட்டது.

உ. இராணுவ தலைமையகத்தில் வழிகாட்டலின் கீழ சிரேஷ்ட போர் நடவடிக்கைகளுக்காக சமிஞ்சை துருப்புகள் பணியமர்த்தப்பட்டனர்.

ஊ. இராணுவத்தில் பணியமர்த்தப்பட்டுள்ள தொடர்பாடல் உபகரணங்கள் மற்றும் சமிஞ்சை பணிகளுக்கான சிப்பாய்களின் தரவுகளை பேணல்.

நிதி விபரங்கள்

201. 2018 அம் ஆண்டில் சமிஞ்சை படையணிக்கான ஒதுக்கீடுகள் பின்வருமாறு:

தொ இல	செலவுத் தலைப்புகளின் இலக்கம்	பெற்றுக் கொண்ட தொகை (ரு)	செலவுகள் (ரு)	மிகுதி (ரு)
(அ)	(ஆ)	(இ)	(ஈ)	(உ)
1.	222-01-2-1303(II)	25,000.00	25,000.00	-
2.	222-01-2-1205(XXIV)	15,000.00	15,000.00	-
3.	222-01-2-1205(XVIII)	13,300.00	12,550.00	750.00
4.	222-01-1-1409(XV)	15,000.00	15,000.00	-

அட்டவணை 3:48. இவ் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடுகள்.

செலவுத் தலைப்புகளின் பயன்பாடுகள்

202. பயிற்சிகள் மாணியத்தின் ஊடாக வழங்கப்பட்ட நிதியத்தினைக் கொண்டு அலுவலகத்தின் வினைத்திறனான செயற்பாட்டிற்காக எழுது கருவிகள் கொள்வனவிற்காக நிதியம் வினைத்திறனாக பயன்படுத்தப்பட்டது.தோட்ட புல் வெளி பராமரிப்பானது நில ஒதுக்கீட்டு நிதியத்தின் ஊடாக பராமரிக்கப்படுகின்றது.சமிஞ்சை படையணியின் துருப்புகளின் அறிவினை மேம்படுத்துவதற்கு வார இறுதி நாளொன்றிட்கான செய்தி பத்திரிகைத்தாள் கொள்வனவு செய்யப்படுகின்றது.

இவ் ஆண்டிற்கான செயல் திறனாய்வு

203. பிரதான சமிஞ்சை அதிகாரி தலைமையத்தினால் வழங்கப்பட்ட தொடர்பாடல் பணி செய்து முடிக்கப்பட்டுள்ளது.

204. 2018 பாதுகாப்பு கருத்தரங்கு மற்றும் சுதந்திர தின விழாவிற்கு ஆளணிகள் வழங்கப்பட்டது.

205. பாதுகாப்பு சேவைகள் கட்டளைகள் மற்றும் பதவிநிலை அதிகாரிகள் கல்லூரியிற்கும் ரேடியோ தொடர்பாடல் வழங்கப்பட்டது, கொதலாவெல பாதுகாப்பு பல்கலைகழகம் மற்றும் இலங்கை இராணுவ கல்வி நிலையத்திற்கான பயிற்சிகள் மற்றும் பொது பட்டமளிப்புகள் போன்றவைகளுக்கும் வானொலி தொடர்பாடல் வசதிகள் வழங்கப்பட்டது.

206. 15.01.2018 பாகிஸ்தான் இராணுவத்தின் முக்கிய பிரதிநிதியின் விஜயத்திற்கான ஒருங்கிணைப்பிற்காக தொடர்பாடல் தொடர்பாடல் வசதிகள் வழங்கப்பட்டது.

207. தாய்லாந்து பிரமதரின் 12.07.2018 அன்று விஜயத்தின் போது தொடர்பாடல் வசதிகள் வழங்கப்பட்டது.

208. 4 ரெஜிமென்ட் இலங்கை சமிஞ்சை படையணியின் சமிஞ்சை படையணி பயிற்சியின் போது 14.05.2018 தொடக்கம் 13.06.2018 வரை ஒருங்கிணைப்புகள் வழங்கப்பட்டது.

209. 16.082018 தொடக்கம் 25.082018 வரை கண்டி பெரஹெர தொடர்பன விடயங்களுக்கு பாதுகாப்பு தொடர்பான விடயங்களுக்கு தொடர்பாடல் வசதிகள் வழங்கப்பட்டது.

210. 06.092018 -28-092018 வரை பாதுகாப்பு படை தலைமையகம் வண்ணிற்கு பொறுப்பான பிரதேசங்களில் நடாத்தப்பட்ட உடற்பயிற்சி கொமரண்ட ஸ்ட்ரைக் கு தொடர்பாடல் வசதிகள் வழங்கப்பட்டது.

211. 2018 மார்ச்சில் நடைபெற்ற அவசரகால நிலைமையினனை கட்டுப்படுத்துவதற்கு பங்குபற்றிய இராணுவ வீரர்களுக்கு தொடர்பாடல் வசதிகள் வழங்கப்பட்டது.

212. இராணவத்தின் சுமூகமான நடவடிக்கைகளுக்காக இலங்கை இராணுவ பொலிஸ் படையணியிற்கு தொடர்பாடல் வசதிகள் வழங்கப்பட்டது.

213. மேற்குறிப்பிடப்பட்ட நிகழ்வுகளைத் தவிர்ந்த இலங்கை இராணுவத்தினால் நடாத்தப்பட்ட விஷேட நிகழ்வுகளுக்கு இத் தலைமையகத்தினால் வானொலி தொடர்பாடல் வசதிகள் வழங்கப்பட்டது.

அடையப்பெற்ற இலக்குகள்

214. மாலி, சூடான் மற்றும் லெபனானிற்கு அமைதி காக்கும் செய்பாடுகளுக்காக நடாத்தப்பட்ட வீரர்களுக்கு தேவையான தொடர்பாடல் வசதிகள் ஒழுங்கு செய்தி கொடுக்கப்பட்டது.

215. மிகவும் தொன்மை வாய்நத வானொலி பாகங்களைக் கொண்டு 58 ம் பிரிவிற்கான வானொலி வலையமமைப்பு உருவாக்கப்பட்டது.

சிக்கல்கள் மற்றும் சவால்கள்

216. வினைத்திறனான வானொலி தொடர்பாடல் துறைக்கு தேவையான உதிரிப் பாகங்களை பெற்றுக் கொள்வது கடினமாகவுள்ளது.

217. உயர்மட்ட தேவைப்பாடுகளுக்கான சமிஞ்சை தொடர்பாடல் துறையாட்களின் பற்றாக்குறைக்கு சிப்பாய்களை பணியமர்த்தல் மற்றும் பூர்த்தி செய்தல்.

218. பொது மக்களின் கேள்விக்கமைய பொது மக்கள் கருவிகளை அதிகரித்தல் சிக்கலாகவுள்ளது.

முடிவுரை

219. வினைத்திறனான வானொலி தொடர்பாடல் கட்டுப்படுத்தி கட்டளையிட்டு நிர்வகிக்கப்படுகினறது. பிரதான சமிஞ்சை அதிகாரியின் உதவியாளராக சமிஞ்சை படையணி இருப்பதோடு மட்டுமல்லாமல் சவால்களையும் எதிர்கொள்கின்றது.

நிதி முகாமைத்துவ கிளை

1. இலங்கை இராணுவத்தின் நிதி தொடர்பான அனைத்து நடவடிக்கைகளையும் சிறப்பாகவும் வினைத்திறனாகவும் முகாமை செய்வதற்கு தலைமை பதவிநிலை அதிகாரியாக செயல்படுகின்றது. இராணுவத்தின் கணக்கியல் அதிகாரி எதிர்வு கூறல், திட்டமிடல்,கட்டுப்படுத்தல் மற்றும் நிதி முகாமைத்துவத்தின் செயல் திறனாய்வுகளுக்கு பொறுப்பாகவுள்ள இராணுவத் தளபதியின் நிதி முகாமைத்துவத்திற்கு பொறுப்பாகும். ஒழுக்கம்,பதவி உயர்வுகள் மற்றும் அனைத்து கணக்கியல் அதிகாரிகளை நியமித்தல் மற்றும் உட்சேர்த்தல் தொழில் சார் முகாமைத்துவத்தினை போன்ற நிர்வாக நடவடிக்கைகளுக்கு நிதி முகாமைத்துவ் பணிப்பாளர் நாயகம் பொறுப்பாகும்.

2. இக் கிளையின் கீழ் செயற்படும் 7 பணிப்பக குழுமங்களின் சரியான முகாமைத்துவம்,மேற்பார்வை செய்தல், கண்காணித்தல் போன்றவற்றினையும் இக் கிளை மேற்கொள்கின்றது.



வரைபடம் 4:1 நிதி முகாமைத்துவ கிளையின் கீழ் செயற்படும் பணிப்பக குழுமங்கள்.

நிதி விபரங்கள்

3. 2018 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீடுகள்.



பட உரு 4:1 இவ் ஆண்டிற்காக கிடைக்கப்பெற்ற ஒதுக்கீடுகள்.

4. ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடுகள் மற்றும் உண்மையான விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன மற்றும் 31.012.2018 ல் உள்ளவாறான செலவினங்கள்.

தொ இல	செலவுத் தலைப்பு	ஒதுக்கீடுகள் (ரூ)	31.12.2018ல் உள்ளவாறான செலவினங்கள்	31.12.2018ல் உள்ளவாறான மிகுதி
(அ)	(ஆ)	(இ)	(ஈ)	(உ)
1.	மீண்டு வரும் செலவினங்கள்	149,135,195,725.00	142,057,952,955.47	7,077,242,769.53
2.	மூலதன செலவினங்கள்	9,037,699,275.00	5,810,369,798.85	3,227,329,476.15
	மொத்தம்	**158,172,895,000.00**	**147,868,322,754.32**	**10,304,572,245.68**

அட்டவணை 4:1 ஒதுக்கீடுகள் மற்றும் உண்மையான செலவினங்கள்.



வரைபடம் 4:2. ஒதுக்கீடுகள் மற்றும் உண்மையான செலவினங்கள்.

இவ் ஆண்டிற்கான செயல் திறனாய்வு

5. கொள்முதல் நடைமுறைகளுக்கான வழிகாட்டல் கை புத்தகம் அறிமுகப்படுத்தல் பிரசுரித்தலின் போது நடாத்தப்பட்ட செயலமர்விற்கு பங்குபற்றிய சிரேஷ்ட அதிகாரிகளுடன் இணைந்து நடாத்தப்பட்டது.

அ. இலங்கை இராணுவ சுயேட்சை படை தலைமையகம் மற்றும் பாதுகாப்பு படை தலைமையகங்கள் - கேனல்

ஆ. ரெஜிமென்டல மையங்கள் - பிரதி மத்திய கட்டளையாளர்

இ. இராணுவ பயிற்சி அமைப்புகள் - பிரதான விரிவுரையாளர்

ஈ. ரெஜிமென்ட பயிற்சி பாடசலைகள் - கமாடண்ட்

6. கொள்வனவுகள் நடைமுறைகள் மற்றும் தொழிநுட்ப மதிப்பீடுகள் கடமைகளுக்காக நேரடியாக தலையிட்டு அதிகாரிகள் மற்றும் சிப்பாய்களுக்கு 27 மற்றும் 28 ம் நவம்பர் மாதங்களில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டது.

7. கணக்கியல் அதிகாரிகளின் தொழிற்திறமையை அதிகரிப்பதற்காகவும் கணக்கியல் துறையில் அறிலைன மேம்படுத்துவதற்காக சர்வதேசங்களிலும் பயிற்சி நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டது.

தொ இல	நாடு	அதிகாரிகளின் எண்ணிக்கை
(அ)	(ஆ)	(இ)
1.	தாய்லாந்து	8
2.	இந்தோனேசியா	5
3.	நெதர்லாந்து	2
	மொத்தம்	**15**

அட்டவணை 4:2 நிதியியல் அதிகாரிகளுக்கு வழங்கப்பட்ட பயிற்சிகள் மற்றும் பயிற்சி வாய்ப்புகள்.

சிக்கல்களும் சவால்களும்.

8. தகுதி வாய்ந்த கணிக்கியல் அதிகாரிகள் மரணங்களினால் அனுமதிக்கப்படட அமைப்புகளில் காணப்படும் வெற்றிடங்களுக்கமைய நேரடி உடசேர்த்தல் முறைமையில் மேஜர் நிலைக்கு தகுதி வாய்ந்தவர்களை உட்சேர்ப்பது கடினமாகவுள்ளது.

வரவு செலவுத் திட்ட மற்றும் நிதி முகாமைத்துவ பணிப்பக குழுமம்.

9. இராணுவ தலைமையகத்தின நிதி முகாமைத்துவ கிளையின் கீழ் இது செயற்படுகின்றது. இராணுவத்தின் நிதி முகாமைத்துவ செயற்பாடுகளுக்கு சரியாக செயல்படுத்தி வருகின்றது.

நிதி விபரங்கள்

10. 2018 ஆம் ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினங்கள் மற்றும் மூலதன செலவினங்கள் பின்வருமாறு:

தொ இல	விபரம்	2018 ஆம ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடுகள் (ரூ)
(அ)	(ஆ)	(இ)
1.	மீண்டு வரும் செலவினங்கள்	149,135.19
2.	மூலதன செலவினங்கள்	9,037.69
	மொத்தம்	**158,172.88**

அட்டவணை 4:3. மீண்டுவரும் செலவினங்கள் மற்றும் மூலதன செலவினங்களின் விபரங்கள் பின்வருமாறு:

புதிய பக்கத்திற்காக இவ்விடம் வெற்றிடமாக விடப்பட்டது

11. 31.12.2018 ல் லெவுத் தலைப்பு நிதியங்களின் கீழே அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது.

அ. மீண்டு வரும் செலவினங்கள்.

தொ இல	செலவுத் தலைப்புகளின் விபரங்கள்	31.12.2018 உள்ளவாறான ஒதுக்கீடுகள்	31.12.2018ல் உள்ளவாறான பொறுப்புகளுடனான செலவினங்கள்	பயன்படுத்தப்பட்ட ஒதுக்கீடுகளின் சதவீதம்
(அ)	(ஆ)	(இ)	(ஈ)	(உ)
1.	தனிநபர் தேவைகள் போக்குவரத்து செலவினங்கள்	119,985,095,000	117,493,017,981	98%
2.	போக்குவரத்து செலவினங்கள்	215,000,000	215,548,493	100%
3.	ஏனைய விநியோகங்கள்	21,386,800,725	21,400,000,980	100%
4.	ஏழைனய பராமரித்தல் செலவினங்கள்	578,000,000	580,815,405	100%
5.	ஏனைய சேவைகள்	6,559,000,000	6,575,087,285	100%
6.	ஏனைய மீண்டுரும் செலவினங்கள்	411,277,250	371,475,532	90%
7.	தொலைந்த மற்றும் வீணாக்கப்பட்டவை	22,750	22,750	100%
	மொத்தம்	**149,135,195,725**	**146,635,968,426**	**98%**

அட்டவணை 4:4. மீண்டுவரும் செலவினங்களின் விபரங்கள்.

ஆ. மூலதன செலவினங்கள்.

தொ இல	செலவுத் தலைப்புகளின் விபரங்கள்	31.12.2018 உள்ளவாறான ஒதுக்கீடுகள்	31.12.2018ல் உள்ளவாறான பொறுப்புகளுடனான செலவினங்கள்	பயன்படுத்தப்பட்ட ஒதுக்கீடுகளின் சதவீதம்
(அ)	(ஆ)	(இ)	(ஈ)	(உ)
1.	மூலதன சொத்துக்களின் புனரமைப்பு மற்றும் அதிகரிப்பு	770,000,000	770,000,000	100%
2.	மூலதன சொத்துக்களின் கொள்வனவுகள்	3,200,527,275	3,200,527,275	100%
3.	மனித வள அபிவிருத்திகள்	1,400,000,000	1,354,569,168	97%
